2002 அக்டோபர் 29]

60—

செஸ் நிதி

***18388—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி விவசாயிகளிடம் பெறப்படும் செஸ் நிதியை, அந்தப் பணம் செலுத்தும் பகுதி விவசாயிகளுக்கே பிரித்து வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. அ.இரா. மலையப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதியிலே நீண்ட காலப் பிரச்சினையாக இருந்த ராஜவாய்க்கால் பிரச்சினைக்காக, ராஜவாய்க்கால் நீரேற்றுப் பாசன விவசாயிகளிடம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1750 வசூல் செய்து, ரூ.95,71,000/- செலவில் அந்தப் பணியை deposit work-ஆகச் செய்வதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது சார்பாகவும், ராஜவாய்க்கால் கடைமடைப் பகுதி விவசாயிகள் சார்பாகவும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி ராஜவாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால், மோகனூர் வாய்க்கால் விவசாயிகளிடம் Irrigation Cess Fund என்கிற நிதியாக, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.50 வீதம் வசூல் செய்து, அரசுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, பொதுப் பணித் துறை ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டத்தின் இருப்புக் கணக்கில் , வைக்கப்பட்டுச் செலவிடப்படுவதாகத் தெரிகிறது. மேற்படி வாய்க்கால் விவசாயிகளிடம் வசூல் செய்யப்படும் செஸ் நிதியானது, தமிழகத்திலுள்ள மற்ற வாய்க்கால் விவசாயிகளிடம் வசூல் செய்யப்படுகிறதா? ஒவ்வொரு

[2002 அக்டோபர் 29

ஆண்டும் வாய்க்கால் பராமரிப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் அரசு நிதியுடன் சேர்ந்து, அந்தந்த வாய்க்கால்களுக்காக வசூல் செய்யப்படும் செஸ் நிதியை அந்தந்த வாய்க்கால்களுக்கே செலவிட அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாகக் கேள்வி போடவும்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 61, திரு. ப.வெ. தாமோதிரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

61—

சத்துணவுக் கூடம்

***4394—திரு. ப.வெ. தாமோதிரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், சின்னவாளவாடி கிராமத்தில் சத்துணவுக் கூடம் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சின்னவாளவாடி கிராமத்திற்கும், பெரியவாளவாடி கிராமத்திற்கும் இடையில் உள்ள வாளவாடி ஆரம்பப் பள்ளியில் சத்துணவு மையம் இயங்கி வருகிறது. சின்னவாளவாடி கிராமத்தில் பள்ளிகள் எதுவும் தனியாக இல்லாததால், அங்கு புதிய சத்துணவு மையம் அமைப்பதற்கான கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS